**Judicial Form No.53.**

**{See Rule 42}**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Cr.P.C)

-----

IN THE COURT OF THE ADDITIONAL SESSIONS JUDGE, VIRUDHUNAGAR

| | | | |
|---|---|---|---|
| Calendar | .. .. | ) | |
| Miscellaneous | .. .. | ) | |
| Preliminary Register | .. .. | ) | **Sessions Case No. 52/2023** |
| Sessions | .. .. | ) | |

| | | |
|---|---|---|
| | { | **Prosecution PW2** |
| Deposition of witness for PW. | { | Defence |
| | { | Court |

| | | |
|---|---|---|
| Name | : | குருசாமி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(எதிரிகள் ஆஜர் இல்லை 317 கு.வி.மு.ச மனு அனுமதிக்கப்பட்டது)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 {Central Act 44 of 1969} on the **18th day of November 2025.**

முதல் விசாரணை **:** நான் சாத்தூர் நென்மேனியில் குடியிருந்து வருகிறேன். நென்மேனி பஞ்சாயத்தில் தண்ணீர் திறந்துவிடும் வேலை பார்த்து வந்தேன்.

அப்போது பஞ்சாயத்து தலைவியான வேலம்மாள் என்பவர் இருந்துவந்தார். எதிரி பெரியசாமியை தெரியும். அவர் எனது ஊர்காரர். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் இரவு 8.30 மணிக்கு நான் தண்ணீர் திறந்து விட்விட்டு வேலம்மாள் வீட்டருகே வந்தபோது, யாரோ என்னை கீழே தள்ளிவிட்டார்கள் எனக்கு தலையில் காயம் ஏற்பட்டது. பின்பு இருசக்கர வாகனத்தில் விருதுநகர் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டதன் பேரில் அதற்கு அனுமதி அளிக்கப்பட்டு அரசு தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்**)**

அரசு தரப்பு குறுக்குவிசாரணை

கடந்த 22.08.2022 ம் தேதி நான் வீட்டில் இருந்தபோது பெரியசாமி என்பவர் வேலம்மாள் வீட்டின் காம்பவுண்டை கல்லால் உடைத்தார் என்றும், அதனை சத்தம்போட்ட வேலம்மாளை, பெரியசாமி அசிங்கமாக பேசினார் என்றும், அதற்கு வேலம்மாள் ஆம்பள இல்லாத வீட்டில் வந்து ஏன் பிரச்சினை செய்கிறார் என்று கேட்டதாகவும், அதற்கு எதிரி பெரியசாமி உன் மகன் வந்து என்னை புடுங்கிடுவானா என்று சொல்லி வேலம்மாளின் தலைமுடியை பிடித்து கீழே தள்ளிவிட்டார் என்றும், அப்போது சத்தம் கேட்டு வந்த நான் ஏன் பொம்பளயாளுடன் சண்டைபோடுகிறாய் என்று கேட்டதற்கு பெரியசாமி பஞ்சாயத்து தெருகுழாயை உடைத்து எடுத்து எனது தலையில் அடித்து இரத்தகாயத்தை

ஏற்படுத்தினார் என்றும் மேற்படி சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேன் என்றும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரி எனது ஊர்காரர் என்பதனால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் சொல்கின்றேன் என்றால் - சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :

எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவித்தார்.

மறுவிசாரணை : இல்லை

திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சாட்சிசொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**/Sd/ S.K.Angalaeswari**
கூடுதல் மாவட்ட நீதிபதி,
விருதுநகர்.